**களணிய பல்கலைக்கழகத்திற்கு இணைந்துள்ள கம்பகா விக்கிரமாரச்சி ஆயுர்வேத கல்வி நிறுவனம் - 2019**

---

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

களணிய பல்கலைக்கழகத்திற்கு இணைந்துள்ள கம்பகா விக்கிரமாரச்சி கல்வி நிறுவனத்தின் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தில் 18 ஆவது பிரிவு பிரகாரம் விதிக்கப்பட்டுள்ள 1995 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க கம்பகா விக்கிரமாரச்சி ஆயர்வேத கல்வி நிறுவனத்தின் விவரக் குறிப்பில் 19 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரை மற்றும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டுமென கருதுகின்ற எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

எனது அறிக்கையின் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, கல்வி நிறுவனத்தின் 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இவ்வறிக்கையில் பந்தி 1.5 இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

**1.3. நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கல்வி நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கல்வி நிறுவனத்தை

கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கல்வி நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கல்விக் கல்லூரியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு கல்வி நிறுவனமானது அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4. நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்வி நிறுவனத்திற்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கல்வி நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து கல்வி நிறுவனத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது அதிகார சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகள்

---------------------

### 1.5.1 நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

------------------------------------------------------------------------------------

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல்,

முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ''சிறப்பாக திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை நிறுவனத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

### 1.5.2 இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு தரநியமங்களுக்கு ஒழுங்கமையாமை

| உரிய தரநியமங்களின் தொடருடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு தரநியமம் 7 இல் 65 ஆவது பந்தி பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யாமை காரணமாக செலவு ரூபா. 53,574,104 ஆன நிலையான சொத்துக்கள் முற்றுமுழுதாக தேய்மானம் செய்திருப்பினும், மேலும், பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி ஏற்பட்ட மதிப்பிடப்பட்ட குறைப்பாடு இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு தரநியமம் 03 பிரகாரம் மீள்திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | இது தொடர்பாக நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டு-ள்ளதாகவும், மதிப்பீட்டு திணைக்களத்தால் இத் தேவை பூர்த்தி செய்யப்ப-டாமையால் 2019 ஆம் ஆண்டில் கணக்கில் வைக்கப்படவில்லை. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு தரநியமங்களுக்-கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2012 ஆம் ஆண்டு பெப்ருவரி 01 ஆந் திகதி வேலை முடிவுறுத்திய நூலக கட்டிடத்தில் பெறுமதி ரூபா.64,171,020 ஆல் மூலதனப்ப-டுத்தியிருப்பினும், அந்த கட்டிடத்தில் பெறுமதிக்கு உள்ளடக்கப்பட வேண்டிய ரூபா. 4,513,788 ஐ இறுதி இரசீதுகள் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக மூலதன முற்பணத்தின்கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன்படி கட்டிடங்களின் பெறுமதி ரூபா. 4,513,788 ஆல் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | உரிய பெறுமதி கட்டிடத்தின் செலவிற்கு எதிர்வருங் காலங்களில் சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | கட்டிடங்களின் செலவு சரியாக அடையாளம் காணப்பட்டு கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதி நிலைமை கூற்றில் நடைமுறையல்லாத சொத்துக்களில் உள்ளடக்கியுள்ள மூலதன அளிப்புகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ள ரூபா.761,800 ஆன புலனாகாத சொத்துக்களின் பொருட்டு மீளாய்விற்கான ஆண்டில் உரிய தேய்மானம் மற்றும் கடன்தீர்ப்பு கணக்கிடப்பட்டு கணக்கு வைக்கப்படவில்லை. | 2020 ஆம் ஆண்டு தொடக்கம் தேவையான சீராக்கல் மேற்கொள்ளப்படும் | நிதிக் கூற்றுகள் செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) புலனாகாத சொத்துக்களை கணக்கு வைத்தல் தொடர்பில் கணக்கீட்டு கொள்கையினை அடையாளம் காணாது மீளாய்விற்கான ஆண்டில் மனித மூலதன அபிவிருத்தி பொருட்டு செலவிடப்பட்ட ரூபா. 330,000 ஐ நிதி நிலைமை கூற்றில் நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் காலங்களில் புலனாகாத சொத்துக்களின் கீழ் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதிக் கூற்றுகளில் புலனாகாத சொத்துக்களை கணக்கு வைப்பதற்காக கணக்கீட்டு கொள்கை அடையாளம் காணப்பட்டு நிதிக் கூற்றுகளில் செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள்,விதிகள்,ஒழுங்கவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு ஒழுங்கமையாமை

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், ஒழுங்கு விதிகள் என்பவற்றுக்கான தொடர் | ஒழுங்கமையாமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1995 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆந் திகதிய 862/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கம்பகா விக்கிரமாரச்சி ஆயர்வேத கல்வி நிறுவனத்தின் விபரக் குறிப்பீடு | | | |
| (அ) விவரக்குறிப்பீட்டில் 5 ஆவது பந்தி | பணிப்பாளர் சபை பொருட்டு உத்தியோகபூர்வமாக நியமனம் பெறுகின்ற களணிய பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடாதிபதி 2018 ஆம் ஆண்டில் ஒரு கூட்டத்திலேனும் | பீடாதிபதி அவர்களின் பிரதிநிதித்துவம் பெற்றுக்கொள்ளுதல் நடைமுறையில் பிரச்சினையுடன் கூடிய நிலைமை ஏற்படுத்துவதால் விபரக் குறிப்பீட்டில் 9(F) பந்தி | தேவையானவாறு விவரக் குறிப்பீடு திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பங்களிப்பு வழங்கப்படவில்லை என்பதுடன், இது தொடர்பாக கல்வி நிறுவனத்தால் பல்கலைக்கழக ஆணைக்குழுவை அறிவுறுத்தியிருந்த போதிலும், அறிக்கை திகதி வரை எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளாமை | மாற்றமடைதல் வேண்டுமென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) விவரக் குறிப்பீட்டில் 6 ஆவது பந்தி | கல்வி நிறுவனத்தில் பணிப்பாளர் பதவி 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் 17 ஆந் திகதியில் பின்னர் வெற்றிடமாகியவுடன், நிறுவனத்தின் நடவடிக்கைகளை பேணிச் செல்வதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் இரண்டு சந்தர்ப்பங்களில் உரிய அதிகாரிகள் இரண்டு பேர் நியமனம் செய்யப்படினும், குறித்த பதவிக்கு முழுநேர காலத்திற்கு நிரந்தர பணிப்பாளர் ஒருவரை நியமனம் செய்வதற்கு அறிக்கையின் திகதி வரை நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. | சட்டத்தில் 20(4) (ஆ) பிரிவின்கீழ் அமைச்சர் அவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி அந்த நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | கல்வி நிறுவனத்தின் செயலாற்றுகை அதிகரிப்பதற்காக விவரக் குறிப்பீட்டில் 6 ஆவது பந்திபடி முழுநேர காலத்திற்கு பணிப்பாளர் நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வெண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைபயன்

மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு விளைபயன் ரூபா. 80,540,075 ஆன குறைப்பாடு காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா.7,898,494 ஆகும். அதன்படி நிதிசார் விளைபயனில் ரூபா.72,641,581 ஆன வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சியடைதலுக்கு ஆளுக்குரிய வேதனாதிகளின் செலவு அதிகரித்தலும் பிரதான காரணமாகியுள்ளது.

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| கல்வி நிறுவனத்தின் வாசிப்பு மண்டபம் பயன்கொள்வதற்கு பொருத்தமற்ற வகையில் இருப்பதால், வேலை பொறியியலாளரால் இந்த கட்டிடத்திற்கு பதிலாக புதிய கட்டிடம் நிருமாணிக்கப்படுதல் வேண்டுமென 2019 ஆம் ஆண்டு சனவரி 09 ஆந் திகதி பரிந்துரை செய்திருப்பினும், 2019 ஆம் ஆண்டு இறுதியிலும் கட்டிடத்தின் நிருமாணிப்பு பணிகள் ஆரம்பிப்பதற்கு பணியாற்றியிருக்கவில்லை. | மண் பாதுகாப்பு அறிக்கை தற்போது கிடைக்கப்பெற்றுள்ளதுடன், காணி கட்டிடங்களின் குழு பரிந்துரைபடி எதிர்கால நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. | நிருமாணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தாமதமின்றி நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும் |

### 3.2 தொழில்பாட்டு வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) வத்துபிட்டிவலயில் அமைந்துள்ள 2.3533 ஹெக்டயார் அளவிலான மூலிகை பூங்கா 2013 செப்தெம்பர் 12 ஆந் திகதி கல்வி நிறுவனத்திடம் கையளிக்கப்பட்டு 06 ஆண்டுகள் முடிவடைந்திருப்பினும், அந்த நிலப் பகுதியினை முறையாக வடிவமைத்து மூலிகை தரத்திலான தாவரங்களை பயிர்ச் செய்தல் மற்றும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தல் என்பவற்றுக்கு அறிக்கை திகதி வரை முடியாதிருந்தமை காணப்பட்டது. | 2019 ஆம் ஆண்டில் நிருவாக ரீதியான மாற்றங்கள் ஏற்பட்டமையால் தொடர்ச்சியாக அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலாமை. | அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு மூலிகை தரத்திலான தாவரங்களை பயிர்ச் செய்து, மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல். |
| (ஆ) கல்வி நிறுவனத்திற்கு 34 ஆசிரியர்கள் இணைப்புச் செய்திருப்பினும், 2017 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்விற்கான ஆண்டு இறுதி வரை ஆராய்ச்சி அளிப்புகளுக்காக விண்ணப்பிக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டில் ஆராய்ச்சி அளிப்புகளுக்கான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றிருப்பினும், அவை அனைத்தும் மருத்துவமனை சார்ந்த ஆராய்ச்சி- | நிரந்தர கல்விசார் பணியாற்தொகுதி ஆராய்ச்சி நடவடிக்கைகளின் பொருட்டு ஈடுபடுத்தல் மீது கவனம் செலுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதேபோன்று 2019 ஆம் ஆண்டில் ரூபா.1,000,000 ம் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவினத்திற்கு ஒதுக்கப்பட்டிருப்பினும், ஆண்டு இறுதியிலும் குறித்த எல்லா பணமும் எஞ்சியிருந்தமையால் நிரந்தர கல்விசாரர் பணியாற்-தொகுதியினர் ஆராய்ச்சியில் ஈடுபடுதல் ஆகக்குறைந்த மட்டத்தில் உள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. | களாவதால் மதிப்பீட்டு குழுவின் அனுமதி பெற்றுக்கொண்டு மீண்டும் முன்வைப்பதற்கு விண்ணப்பத்தாரிகளிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | ஆயுர்வேத மருத்துவ விஞ்ஞான பட்டப் படிப்பு கற்கைநெறியின் காலவெல்லை 05 ஆண்டுகள் ஆயினும், மாணவர்கள் மற்றும் நிருவாகம் என்பவற்றுக்கிடையில் ஏற்பட்ட பிரச்சினையுடன்கூடிய நிலைமை காரணமாக கல்வி ஆண்டு நீடிக்கப்பட்டதால் கற்கைநெறி பூர்த்தி செய்வதற்கு 06 ஆண்டுகள் செல்லுமென அவதானிக்கப்பட்டது. 2019 டிசெம்பர் மாதமாகும்போது 06 ஆண்டுகள் கடந்த 68 மாணவர்கள் பட்டப் படிப்பு முடிவுறுத்துவதற்கு தாமதமாகியதன் காரணமாக மேலும் கல்வி நிறுவனத்தில் தங்கியிருத்தல் அவதானிக்கப்பட்டது. | மாணவர்கள் போதனைகள் மற்றும் பரீட்சைகளை பிற்போடுதல், அத்துடன் பரீட்சைகளை பகிஷ்கரித்தல் போன்ற விடயங்கள் காரணமாக உரிய காலப் பகுதியில் பட்டப் படிப்பை முடிவுறுத்துவதற்கு முடியவில்லை. | உரிய காலப்பகுதியில் பட்டப் படிப்பு கற்கைநெறிகளை முடிவுறுத்துவதற்கு முடியுமான நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்தல் வேண்டும். |
| (இ) | பரீட்சை நடவடிக்கை நடாத்தல் தொடர்பான பரிசோதனையில் கோட்பாட்டு கற்கை பிரிவில் கற்கை நாட்காட்டிக்கமைவாக Level I மற்றும் Level II ஆண்டுகளில் கற்கை மேற்கொள்கின்ற 130 – 106 மாணவர்களுக்கிடையிலான எண்ணிக்கை பொருட்டு 2019 ஆண்டு நடாத்தப்பட்ட (Mid Semester) பரீட்சைக்கு ஒழுங்குமுறையில் 3 - 6 இற்கு இடைப்பட்ட சிறிய அளவிலான மாணவர்களின் எண்ணிக்கை தோற்றியிருத்தல் அவதானிக்கப்பட்டது. | பெரும்பாலான மாணவர்கள் பரீட்சையில் தோற்றாவிட்டாலும், எல்லா பரீட்சைகளும் உரியவாறு நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | உரிய பரீட்சை பொருட்டு மாணவர்கள் தோற்றுதல் வேண்டுமென வலியுறுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | பட்டப்படிப்பு மாணவர்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ், ஆயுர்வேத மருத்-துவ பட்டப் படிப்பு மாணவர்-களின் பஞ்சகர்மா பயிற்றுவிப்பு | எதிர்வருங் காலத்தில் அந்த நிதியங்களை பயன்படுத்தி மாணவர்களின் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விளையாட்டு நடவடிக்கை- | தற்போதுள்ள நிதியங்களின் மீதிகளை குறித்த நிதியம் தாபிக்கும் நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு பயன்படுத்தல் |

| | | |
|---|---|---|
| நடவடிக்கைகளின் பொருட்டும் கணினி நடவடிக்கைகள் தொடர்பான ஆற்றலை அபிவிருத்தி செய்யும் பொருட்டும் 2010 ஆம் அண்டு ஒக்டோபர் 18 ஆந் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஒதுக்கீடு செய்திருந்த ரூபா. 3 மில்லியன் தொகையில் எஞ்சியிருந்த மீதியான ரூபா.1,214,142 ம் மற்றும் 6 நிதியங்களின் மொத்தம் ரூபா. 2,240,628 ம் பல ஆண்டுகளாக குறித்த நோக்கத்திற்கு செலவிடாது குறைந்த பயன்பாடாக காணப்பட்டது. | பயன்படுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | களின் பொருட்டு வேண்டும். |

## 3.3 நிதியங்களின் குறை பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| கல்வி நிறுவனத்திடம் வழங்கிய மூலதன அளிப்புகளில் ரூபா.178,989,779 ஐ மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் உரிய நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தாது பயனற்று இருந்தது. | கட்டிடங்களின் நிருமாணிப்பு மற்றும் காணி சுவீகரிப்பு என்பவற்றில் பிரச்சினையுடன்கூடிய நிலைமைகள் காரணமாக நிதி பயன்படுத்தப்படவில்லை. | மூலதன அளிப்புகள் ஏற்புடைய நோக்கங்களின் பொருட்டு பயன்படுத்தல் வேண்டும். |

## 3.4 ஒப்பந்த நிருவாகத்தின் குறைப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மதிப்பிடப்பட்ட செலவு ரூபா.79 மில்லியன் தொகையிலான 990 சதுர மீற்றர் அளவிலான 04 மாடிகளைக் கொண்ட நிருவாக கட்டிடத்தை நிருமாணிக்கும் ஒப்பந்தம் பொருட்டு 2011 ஆம் ஆண்டில் அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றிருப்பினும், வேலைகளை ஆரம்பிக்கையில் முறையான அனுமதியின்றி அக் கட்டிடம் 1,475 சதுர மீற்றர் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. | அனுமதி பொருட்டு உயர் கல்வி அமைச்சிடம் முன்வைக்கப்பட்ட கடிதத்திற்கு பதிலாக, கட்டிடத்தின் எஞ்சிய வேலை பகுதிகளை நிறுவனத்தில் உழைக்கப்பட்ட நிதி பயன்படுத்தி மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | நிருமாணிப்பு நடவடிக்கைகள் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டின்கீழ் முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆகையால் கல்வி நிறுவனத்திடம் நிதி பெற்றுக்கொள்வதில் சிரமம் ஏற்பட்டமையால் நிருமாணிப்பு நடவடிக்கைகளை திட்டமிடப்பட்டவாறு முடிவுறுத்துவதற்கு இயலாது இரண்டு மாடிகளின் வேலைகளை மட்டும் பூர்த்தி செய்து அலுவலக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. | | |
| (ஆ)(i) மதிப்பிடப்பட்ட செலவு ரூபா. 134.5 மில்லியன் தொகையில், போதனா மண்டப வசதிகளும் அடங்கலாக நிருமாணிப்பதற்கு உரியதாக இருந்த நான்கு மாடி கற்கை கட்டிடத்தில் நிருமாணிப்பு நடவடிக்கைகள் 2014 ஆம் ஆண்டு செப்தெம்பர் 18 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ஆயினும் ஒப்பந்தக்காரர்களுடன் ஏற்பட்ட பிணக்கு காரணமாக 2018 ஆம் ஆண்டு பெப்ருவரி 25 ஆந் திகதி ஒப்பந்தக்காரரால் கொழும்பு வர்த்தக நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டிருந்ததுடன், ஒப்பந்த உடன்படிக்கை படி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டதால் ஒப்பந்தக்காரர் 2019 ஆம் ஆண்டு யூலை 03 ஆந் திகதி வழக்கிலிருந்து கேட்டு விலகியிருந்தார் வழக்கில் கேட்டு விலகிய பின்னர் ஓராண்டு சென்றிருப்பினும், எஞ்சிய வேலைகளை ஆரம்பிக்கப்படவில்லை. | ஒப்பந்த கம்பெனியிடம் நிலுவை இரசீதுகளை சீராக்கிய பின்னர் நிருமாணிப்பு நடவடிக்கைகளை ஆரம்பிக்க எதிர்பார்க்கப்படுகிறது. | நிருமாணிப்பு நடவடிக்கைகளை தாமதமின்றி ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ii) 5 ஆண்டுகளுக்கு அதிகமான காலப்பகுதி அரைவாசி பகுதி முடிவுறுத்திய கட்டிடம் மழை காரணமாக மாடிகள் ஊடாக தண்ணீர் வழிந்தோடுதல் மற்றும் கீழ் மாடியில் தண்ணீர் நிரம்பி வழிவதால் கட்டிடம் படிப்படியாக சேதங்களுக்கு உள்ளாகும் நிலைமை ஏற்படுதல் அவதானிக்கப்பட்டது. | விரைவாக கூரைகளை இடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும், நிருமாணிப்பு நடவடிக்கைகளை புதிய ஒப்பந்த கம்பெனிமூலம் நிறைவேற்றுவதற்கு அமைச்சு அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | கட்டிடத்திற்கு சேதங்கள் ஏற்படும் நிலைமை-யிலிருந்து பாதுகாத்து எஞ்சிய நிருமாணிப்பு நடவடிக்கைகளை தாமதமின்றி ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் பணியாற்தொகுதி 50 ஆயினும், உண்மையான எண்ணிக்கை 36 ஆகும். அதன்படி கல்விசார் பணியாற்தொகுதியில் 14 வெற்றிடங்கள் இருப்பினும் ஒரு விரிவுரையாளர் ஏழு ஆண்டுகளிலான லீவும், பயிலுநர் விரிவுரையாளர் இரண்டு பேர் கற்கை லீவுகளும் பெற்றுக்கொண்டிருந்தபடியால் அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் பணியாற்தொகுதியில் 28% ஆன பற்றாக்குறையின்கீழ் கற்கை நடவடிக்கைகளை பேணிச் செல்வதாக அவதானிக்கப்பட்டது. அதேபோன்று முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் கிடைக்கப்பெற்ற தற்காலிக கல்விசார் பணியாற்தொகுதியில் 15 பல்கலைக்கழக ஆசிரியர்களை அங்கீகரித்திருப்பினும், நிரந்தர பல்கலைக்கழக ஆசிரியர்களின் வெற்றிடங்கள் காரணமாக அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையிலும் பார்க்க 06 பேர் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நிரந்தர பணியாற்தொகுதியின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. | நிரந்தர பணியாற்தொகுதியின் வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். |

# 4. கணக்கீட்டு நெறிமுறை மற்றும் நல்லாட்சி

## 4.1 வருடாந்த செயற்றிட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்விற்கான ஆண்டில் செயற்றிட்டம்படி 5 இலக்குகளின்கீழ் 74 செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருப்பினும், அதில் பணம் அறவிடப்பட்டு நடாத்தப்படும் கற்கைநெறிகளில் மாணவர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் அடங்கலாக 11 செயற்பாடு- | ஆண்டுக்குள் நிருவாகத்துடனான மாற்றங்கள் மற்றும் மாணவர்களின் போராட்டங்கள் மற்றும் ஊழியர் பணிபகிஷ்கரிப்பு என்பன காரணமாக முன்னேற்றம் குறைவடைந்துள்ளது. | செயற்றிட்டத்தில் உள்ளடக்கியுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு செயலாற்றுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| களை நிறைவேற்றப்படவில்லை. நிறைவெற்றிய 24 செயற்பாடுகளின் முன்னேற்றம் 50% இலும் பார்க்க குறைந்த மட்டத்தில் இருந்தது. | | |
| (ஆ) இலங்கையில் அல்லது வெளிநாட்டில் பல்கலைக்கழகங்கள் அல்லது நிறுவனங்களுடன் கற்கைகள், பயிற்றுவிப்புகள் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளில் பல்கலைக்கழக ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை பரிமாற்றிக்கொள்ளும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தல் கல்வி நிறுவனத்தின் கடமைப்பொறுப்பாக இருப்பினும், 2019 ஆம் ஆண்டின் செயற்றிட்டத்தில் உள்ளடக்குவதற்கு அல்லது செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | 2019 ஆண்டின் செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. | கல்வி நிறுவனத்தின் கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக செயற்றிட்டத்தில் உள்ளடக்கி நடைமுறைப்படுத்தல் வேண்டும். |

## 4.2 வரவு செலவு கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டுக்கு தயாரிக்கப்பட்டிருந்த வரவு செலவு பதிவேட்டுடன் உண்மையான பெறுமதிகளை ஒப்பிடுகையில் 50% தொடக்கம் 100% வரையிலான எல்லைக்குள் ஏற்றத் தாழ்வுகள் அவதானிக்கப்பட்டமையால் வரவு செலவு பதிவேடு பயனுள்ள முகாமைத்துவ நிருவாக முறையாக பயன்படுத்தவில்லை. | நிறுவனத்தில் கட்டுப்படுத்த முடியாத நிலைமைகள் காரணமாக இந்த ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டுள்ளன. | வரவு செலவு பதிவேடு பயனுள்ள முகாமைத்துவ கட்டுப்பாட்டு முறையாக பயன்படுத்தல். |